**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 101/2018**

**Prosecution Witnesses : 5**

| | |
|---|---|
| Name : மணி | Caste : |
| Father 's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

(Accused present)
**14.06.2024**
**முதல் விசாரணை**

நான் வில்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சங்கரேஸ்வரி எனது மச்சினர் மகள் ஆவார். ஆஜர் எதிரி பழனிவேல் சங்கரேஸ்வரியின் மாமனார் ஆவார். 1வது எதிரி சுரேஷ்குமாரை எனக்கு தெரியும். லதாவை தவிர மற்ற எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2015 வது வருடம் சுரேஷ்குமாருக்கும் சங்கரேஷ்வரிக்கும் எங்கள் ஊரில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்காக சங்கரேஷ்வரியின் வீட்டில் இருந்து 25 பவுன் நகைகளும், 2 லட்ச ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் கொடுத்தார்கள். திருமணம் முடிந்து 1வது எதிரி வீட்டில் சங்கரேஷ்வரி கூட்டுக்குடும்பமாக இருந்து வந்தார். 1வது எதிரி சுரேஷ்குமாருக்கும் சங்கரேஷ்வரிக்கும் பிரச்சினை ஏற்பட்டு சங்கரேஷ்வரி மருந்து குடித்துவிட்டார் என சங்கரேஷ்வரியின் அப்பா என்னிடம் சொன்னார். இந்த பிரச்சினை நடைபெற்ற போது திருமணம் முடிந்து 1 வருடம் இருக்கும். சங்கரேஷ்வரி அவரது அப்பா வீட்டிற்கு வந்துவிட்டார். ஆஜர் எதிரி பழனிவேலின் உறவினர்கள் எங்கள் ஊர் வில்லுருக்கு வந்து பஞ்சாத்தார்கள் முன்னிலையில் சங்கரேஷ்வரி வீட்டாரிடம் பேசினார்கள். பின்பு முடிவில் சங்கரேஷ்வரியையும் 1வது எதிரியையும் தனிக்குடுத்தனம் கள்ளிக்குடியில் வைப்பதாக சொல்லி அதே போல் கள்ளிக்குடியில் தனிக்குடுத்தனம் வைத்தார்கள். அவர்கள் தனிக்குடுத்தனத்திலும் அ.சா.1க்கும் 1வது எதிரிக்கும் பிரச்சினை வந்தது. எனவே அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

திருமணம் முடிந்து 1 ஆண்டு காலம் கழித்து மருந்து குடிப்பதற்கு முன்பு அ.சா.1ம், 1ம் எதிரியும் சந்தோஷமாக தான் இருந்தார்கள். நான் கள்ளிக்குடியில் தனிக்குடுத்தனம்

வைப்பதற்கு பேசிய பஞ்சாயத்தில் நான்தான் இருந்து பேசி முடித்தேன். சங்கரேஷ்வரி கூட்டுக்குடித்தனம் இருக்க முடியாது என சொன்னதால் தனிக்குடுத்தனம் வைப்பதற்கு கேட்டதாலும் அதற்கு எதிரியும் ஒத்துக் கொண்டதாலும் தனிக்குடுத்தனம் வைத்தேன். இதை தவிர வேறு எந்த பிரச்சினையும் எனக்கு நேரடியாக தெரியாது. சங்கரேஷ்வரி மற்றும் அவரது அப்பா சொல்லி தான் எனக்கு தெரியும்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 101/2018**

**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : முனியாண்டி | Caste | : |
| Father 's Name | : பெரிசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**14.06.2024**

**முதல் விசாரணை**

நான் வில்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் பணி செய்து வருகிறேன். அ.சா.1 சங்கரேஸ்வரி எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரி பழனிவேல் சங்கரேஸ்வரியின் மாமனார் ஆவார். 1 வது எதிரி சுரேஷ்குமாரை எனக்கு தெரியும். லதாவை தவிர மற்ற எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு சுரேஷ்குமாருக்கும் சங்கரேஷ்வரிக்கும் எங்கள் ஊரில் வைத்து திருமணம் நடைபெற்றது மட்டும் தெரியும். மற்றபடி வேறு பிரச்சினை பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது 1வது எதிரிக்கும் அ.சா.1க்கும் திருமணம் நடைபெற்று அந்த திருமணத்திற்கு பெண் வீட்டார் 25 பவுன் நகையும் சீர்வரிசை பொருட்களும் செய்தார்கள் என்றும் அதன் பின்பு சங்கரேஷ்வரி எதிரிகளின் வீட்டில் வாழ்ந்து வந்த போது 1 முதல் 4 எதிரிகள் சேர்ந்து அவரை உடல் அளவிலும் மனதளவிலும் கொடுமை செய்து அவரை அடித்துக் காயம் ஏற்படுத்தி அவரை அசிங்கமாக திட்டினார்கள் என்றும் 1 வது எதிரி 5 வது எதிரியுடன் சேர்ந்து கணவன் மனைவியோடு சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றும் அது எதிரிகளின் குடும்பத்தாருக்கு தெரியும் என்றும் அதன் பின்பு எதிரிகளின் வீட்டில் இருந்த வாஷிங்மெசினை நான்டாடா ஏசி மூலமாக ஏற்றிக் கொண்டு லதா என்பவர் வீட்டில் இறக்கி வைத்தேன் என்றும் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.**

என்னை போலிசார் சம்பவம் பற்றி எதுவும் விசாரிக்கவில்லை. வாஷிங்மெசினை சங்கரேஷ்வரியின் அப்பா வீட்டில் ஏற்றினேன். ஏற்றிவிடும் போது சங்கரேஷ்வரியின் தம்பியும் உடன் இருந்தார். ஆனால் நான் இதுசம்பந்தமாக போலிசில் சொல்லவில்லை.